சாட்சிகளின் வாக்குமூலம்.

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.

**அசல் வழக்கு எண்.165/2008**

வாக்குமூலம் - பி.வா.சா.4 தொடங்கும் நேரம் : 12.26 p.m.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னப்பன் | மதம் | : | |
| த/பெ. | : | கிருஷ்ண கவுண்டர் | தொழில் | : | |
| கிராமம் | : | மருதாடு | வயது | : | |
| தாலுக்கா | : | | நாள் | : | 30.06.2025 |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் சாட்சியம்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 3ஆம் தரப்பினர் ஆவேன். தாவாவில் உள்ள பிரதிவாதிகள் தரப்பு 4ஆம் சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் கிரய ஆவணம் (**பி.வா.சா.ஆ.1**)ல் 2வதாக போடப்பட்டுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய சாட்சியத்தை ஏற்று தாவாவை தள்ளுபடி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**.

என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2ல் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். காலமான 1ம் வாதி (போலச்சியம்மாள்) பணம் கொடுத்ததற்கான சாட்சி கையெழுத்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிரயத்திற்காக கொடுக்கப்பட்ட பணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் காலமான 1ம் வாதி குடிசை போட்டு குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். சாய்கிருஷ்ணன் என்பவர் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான். மேற்படி சாய்கிருஷ்ணன் காலமான 1ம் வாதியிடம் பணம் வாங்கியதற்காக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். காலமான 1ம் வாதியின் இடம் அப்படியே தான் உள்ளதா என்றால் அப்படியே தான் உள்ளது. சாய்கிருஷ்ணனுக்கும் காலமான 1ம் வாதிக்கும் இடையே தாவா இடம் சம்பந்தமான விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும்

என்றால் சரிதான். ஏற்கனவே இருவரும் தாவா சொத்துக்களை பொறுத்து போக்கியம் செய்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாய்கிருஷ்ணன் தந்தை பத்ரி வெங்கட்நாராயணன் அவருடைய பெரியப்பா ராமசுப்பய்யர் ஆகியோருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இதுசம்பந்தமாக சாய்கிருஷ்ணன் என்னிடம் ஏதும் கூறினாரா என்றால் இல்லை. எங்கள் ஊரில் உள்ள சொசைட்டி மீது சாய்கிருஷ்ணன் வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு இதே நீதிமன்றத்தில் தான் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சாய்கிருஷ்ணன் சொசைட்டி மீது போட்ட வழக்கில் என்ன சாட்சியம் அளித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காலமான 1ம் வாதிக்கு கிரய உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட சொத்து அவருக்கு பாத்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் 1ஆம் பிரதிவாதியின் (**சின்னக்கண்ணு**) கணவர் தான் என்னை அழைத்து வந்தார். 2ஆம் பிரதிவாதி மணியம்மாள் என்கிற ருக்மணியம்மாள் எங்கு வசித்து வருகிறார் என்றால் மருதாடு பள்ளத்தெருவில் தான் வசித்து வருகிறார். 2ஆம் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததை பற்றி 1ம் பிரதிவாதியின் கணவர் என்னிடம் கூறினாரா என்றால் கூறினார். மேற்படி 2ஆம் பிரதிவாதி சாட்சியமளிக்கும்போது ஊரைவிட்டு சென்று 15, 20 ஆண்டுகள் ஆகிவிட்டது என்று கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் மருதாடு கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். அப்படி என்றால் 2ம் பிரதிவாதி வசித்து வருகிறார் என்று எனக்கு தெரியும் என்றால் அவர் அவருடைய மகள் வீட்டிலும் இருக்கலாம். தாவா சொத்து சம்பந்தமாக காலமான 1ம் வாதி போலச்சியம்மாளை ஏமாற்றவேண்டும் என்பதற்காக நானும் 1ஆம் பிரதிவாதியின் கணவரும், சாய்கிருஷ்ணனும் சேர்ந்து பிரதிபலன் இல்லாத ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதால் மேற்படி ஆவணம் (**பி.வா.சா.ஆ.1**) செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பே சாய்கிருஷ்ணனும், காலமான 1ஆம் வாதியும் சேர்ந்து கிரய உடன்படிக்கை ஏற்படுத்தி அதன் மூலம் காலமான 1ம் வாதிக்கு தாவா சொத்துக்களில் உரிமையடைந்தார் என்றால் சரிதான்.

முடிவுறும் நேரம் : 12.45 p.m.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.